# இரட்டை காப்பியங்களில் மாதவி குடும்பமும் உறவுகளும்

*ச. அனிதா*
மூன்றாமாண்டு தமிழ்த்துறை
புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
வெய்க்காலிப்பட்டி

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958723

## முன்னுரை

உயிரினங்களுள் மனிதனே மேலான அறிவைப் பெற்றவானகத் திகழ்கிறான். அவ்வறிவிற்கு காரணமாய் இருப்பது மனமாகும். மனத்தை உடையதால் மனிதன் என்பது காரணப் பெயராகும். அம்மனிதன் தொடக்கத்தில் விலங்குகளைப் போல வாழ்ந்தான். காலப்போக்கில் ஊன்றி நடப்பதற்கு உதவிக் கைகளைப் பிடிப்பதற்கு பயன்படுத்தி எழுந்து நின்றான். பின்னர் படிப்படியாக பேச கற்றுக்கொண்டு, குழுவாக வாழத் தொடங்கினான். அக்குழு வாழ்க்கை பின் குடும்ப வாழ்க்கையாகத் திகழ்ந்தது. இதற்கு பழமை வாய்ந்த குடும்பமும், உறவுகளும் இருந்தாலும் இரட்டைக் காப்பியங்களில் மாதவி குடும்பமும் உறவுகளும் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## குடும்பம் எனும் சொல்

கணவன், மனைவி, குழந்தைகள் மற்றும் உதிரத் தொடர்புடைய உறவினர்கள் கூடி வாழும் சமூக அமைப்பு குடும்பம் என்று பால்ஸ் அகராதி குறிப்பிடுகிறது. குடும்பம் என்பது தமிழ்ச் சொல்லாகும். இது குடம்பை என்னும் சொல்லடியாகத் தோன்றியது. இச்சொல்லிற்கு உடம்பு, பறவைக்கூடு, முட்டை எனப் பல் பொருள்களைத் தமிழ்மொழி அகராதி தருகிறது. ஆயினும் இச்சொல்லிற்கு பறவைக் கூடு என்பதைப் பொருத்தமான பொருளாக கொள்ளலாம். இதனைச்

> **“........ சினையின் மீமிசை குடம்பை”** **(நற்றிணை 91)**
> **“பீலியன் இழைத்த குடம்பை”** **(புறநானூறு 318)**

என்பன போல அமைந்த சங்க இலக்கியத் தொடர்கள் எடுத்துரைக்கின்றன.

## உறவு

மனிதன் தனித்து வாழ்வதில்லை. மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு பிணைந்து வாழ்கிறான். பிறருடன் அவனுக்கு ஏற்படுகிற பிணைப்புகள் ஒரே வகையினதாகவோ ஒரே நிலையினதாகவோ ஒரே வாயிலாகவோ அமைவதில்லை. பல்வேறு வகையினங்களாகப் பல்வேறு வழிகளில் அப்பிணைப்புகள் அமைகின்றன. அவை குருதி உறவு, மண உறவு என இரு வகையான உறவுகள் உள்ளது என்பதை வாழ்வியற் களஞ்சியம் கூறுகிறது. இவை தவிர நட்பு முறை உறவும் உள்ளது.

### குடும்ப உறவினர்களும் உறவுகளும்

குடும்பத்தில் இடம்பெற்றவர்களைச் சங்க இலக்கியங்கள் உறவு முறையால் சுட்டுகின்றன. இல்லறத்தில் தலைப்பட்ட ஆண் கணவன் எனவும், பெண் மனைவி எனவும் அழைக்கப்படுவர்.

**"மாசில் கற்பின் புதல்வன் தாய்"** ***(அகம் 6)***

**"தந்தை தோழர் இவர் என் மகளிர்"**

***(புறநானூறு 201)***

தாய், தந்தை, புதல்வன் எனும் சொற்கள் சங்க இலக்கியங்களில் கையாளப்பட்டு இருப்பதை இதன் மூலம் அறியலாம்.

தனிக்குடும்பம் பொது நலத்திற்காகவே அமைந்தது. குடும்பம் அளவாகப் பெற்று வளத்துடன் வாழ்ந்தது. தந்தை, தாய், மகன், மகள், தங்கை எனத் தற்காலத்தில் வழங்கப்படும் பெயர்கள் முற்காலத்திலும் வழங்கின. பாட்டன், அண்ணன், மாமன் போன்ற உறவு முறைக்குரிய சூழல்கள் காட்டப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றிற்குரிய முறைப்பெயர்கள் காட்டப்படவில்லை.

தோழி, செவிலி போன்றோரும் குடும்ப உறுப்பினர்களாகியுள்ளதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது.

### இரட்டைக் காப்பியங்கள்

மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றியது மணிமேகலை காப்பியம். சேரன் செங்குட்டுவன் இளவல் இளங்கோவடிகள் இயற்றியது சிலப்பதிகாரம். இவ்விரண்டு காப்பியத்திலும் பல்வேறு வகையான குடும்பங்கள் பல்வேறு கோணங்களில் காட்டப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் குடும்பக் கட்டமைப்பையும் மனித உறவுகளையும் செவ்வனே காட்டுகின்றன.

### இரட்டைக் காப்பியத்தில் மாதவி குடும்பமும் உறவுகளும்

தந்தை, தாய், மகன், மகள் என ஏனைய உறவுகள் ஒரு கட்டமைப்பும், பிணைப்பும் ஒருவருடைய தீமைகளுக்காகவும், இன்பம், துன்பங்களுக்காகவும், மற்றொருவர் பாதிக்கப்படும் பாங்கும் காப்பியங்களில் நன்கு காட்டப்பட்டுள்ளது.

இரட்டைக் காப்பியத்தில் மாதவி குடும்பம் என்பது கோவலன், மாதவி, மணிமேகலை என மூவரும் சேர்ந்து வாழ்ந்து ஒரு குடும்பத்தை காட்டுகிறது.

கோவலனுக்கும், மாதவிக்கும் மணம் முடிக்கப்பட்டு கணவன், மனைவி ஆகவில்லை என்றாலுங்கூட மனம் ஒன்றி கணவன் மனைவி ஆனவர்.

**"செம்புல பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"**

***(பாடல் 40)***

என்ற குறுந்தொகை வரிகள் இதனை மெய்ப்பிக்கின்றன. மாதவி கணிகை என்ற போதிலும் கணவன் மனைவி உறவில் கலங்கம் சேர்க்க விரும்பாத சேற்றில் மலர்ந்த செந்தாமரையாய் மாதவி வாழ்ந்தாள். ஒருத்திக்கு ஒருவன் என்ற தமிழர் பண்பாட்டைப் பின்பற்றினாள்.

கணவன் கோவலன் மதுரை நகரில் கள்வன் என கொல்லப்பட்டான் எனக் கேள்வியுற்ற தணலில் இட்ட புழுவென தாங்கொணாத் துயரம் அடைந்தாள். கோவலனுக்கும் மாதவிக்கும் இடையேயான கணவன் மனைவி உறவு தான் இதன் மூலம் காட்டப்படுகிறது.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையை கண்ணகியின் மகள் மணிமேகலை என மாதவி குறிப்பிடுவது கணிகையர் தொழிலாகிய தீத்தொழில் செய்யாள் என்பதை,

**"அருந்தவப் படுத்தல் அல்ல தியாவதும்**
**திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்"**

***(காதை 2, வரிகள் 55-57)***

எனத் தெளிவாக உரைப்பதன் மூலம் தாய், மகள் என்ற குடும்பக் கட்டமைப்பு நிலை நிறுத்தப்படுகிறது.

மணிமேகலையின் தந்தையாகிய கோவலனுக்கும், தாயாகிய கண்ணகிக்கும் நேர்ந்த துன்பத்தைக் கேட்டு மணிமேகலை கண்ணீர் வடித்தாள் என்பதை,

**"மாதர் செங்கண் வரிவனப்பு அழித்துப்**
**புலம்புநீர் உருபடிப் பொதியவிழ் நறுமலர்**
**இழங்கிதழ் மாலையை இட்டு நீராட்ட"**

***(காதை 3, வரிகள் 8-10)***

எனக் கூறுவதன் மூலம் தாயிடமும், தந்தையிடமும் மணிமேகலை கொண்டிருந்த படிப்பும், பற்றும், பாசமும் குடும்ப பாங்கும் வெளிப்படுகின்றன.

மணிமேகலை வஞ்சி மாநகர் சென்றபோது கண்ணகி கோவலன் கோவிலுக்குள் சென்று இருவரையும் வழிபட்டாள் என்பதன் மூலம் பெற்றோருக்கும், மகளுக்கும் இடையே நிலவிய குடும்ப கட்டமைப்பு தெளிவாகிறது.

கண்ணகியின் தாய், தந்தையும், கோவலனின் தாய், தந்தையும் பற்றி ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மாதவியின் தாயார் பெயர் சித்ராபதி என்பது மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்ணகிக்கு ஒரு தேவந்தி போல மாதவிக்கு ஒரு வயந்த மாலை தோழியாக அமைந்தது மனித உறவாகும்.

கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோர் கோவலனிடம் வைத்திருந்த உறவு மிகச்சிறந்த குடும்ப உறுப்பினர்களிடேயான மனித உறவாகும்.

மணிமேகலை சிறைச்சாலையை அறக்கோட்டமாக மாற்றியதும், அமுதசுரபி மூலம் காய சண்டிகை போன்ற பலருக்கு பசிப்பிணி போக்கியதும் மனித உறவாகும்.

கோவலன் செல்வம் வழங்கி பிறர் துயர் களைந்து இல்லோர் செம்மல் கருணை மறவன் என பெயர் பெற்றதும் மனித உறவுக்கு அடையாளமாகும்.

கோவலன், மாதவி, மணிமேகலைக் குடும்பத்துக்கும் கோவலன், கண்ணகி என இருவர் தனித்து குடும்பமாக இருந்த போதும் கௌசிகன் மாதவியின் துயரத்தை எடுத்துக் கூறி மாதவியிடம் பிழை இல்லை என்று சொல்லி அவர்களை சேர்க்க நினைப்பது மனித உறவாகும்.

கண்ணகி, கோவலனுக்கு கவுந்தியடிகள், மாதவி, ஐயை, உதவுவதும் மனித உறவாகும்.

## முடிவுரை

மேற்கண்ட செய்திகளால் சங்க இலக்கியங்கள் மட்டுமல்ல, இரட்டைக் காப்பியத்திலும் குடும்பக் கட்டமைப்பும் மனித உறவுகளும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது. இதில் மாதவியின் குடும்பக் கட்டமைப்பும் மனித உறவும் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளதை ஆய்வின் முடிவாகக் காணலாம்.

## மேற்பார்வை நூல்கள்

1. நற்றிணை - பாடல் : 91 - உரையாசிரியர்: முனைவர். கு. வெ. பாலசுப்பிரமணியம்.
2. புறநானூறு - பாடல் : 318 - உரையாசிரியர்: முனைவர் க. திலகவதி
3. புறநானூறு - பாடல் : 201 - உரையாசிரியர்: முனைவர் க. திலகவதி
4. குறுந்தொகை - பாடல் : 40 - உரையாசிரியர்: முனைவர். வி. நாகராசன்